# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1965/18 - 2016 මැයි මස 03 වැනි අඟහරුවාදා - 2016.05.03

*1965/18 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 11/80 (26)*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன், சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய
அமைச்சர்.

கொழும்பு,
2016, ஏப்பிரல் 22.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின் உணவு (சீனி மட்டங்களுக்கான நிறக் குறியீட்டு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2016 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. ஆளெவரும், இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உணவை, அத்தகைய உணவு 3 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் சுட்டுத்துண்டிடப்பட்டிருந்தாலொழிய, விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ, விநியோகித்தலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ ஆகாது.

3. அத்தகைய உணவைக் கொண்டுள்ள கொள்கலன் அல்லது பொதி, பின்வருவனவற்றுடன் ஒத்திருக்க வேண்டிய சுட்டுத்துண்டொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) அட்டவணை II இன் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக சீனி உள்ளீட்டின் எண்சார் விவரணம் ;

(ஆ) அட்டவணை II இன் நிரல் 2 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக ஒப்புநோக்கிய சீனி மட்டத்தின் விவரணம் ;

(இ) அட்டவணை II இன் நிரல் 3 இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவும் மற்றும் அட்டவணை III இல் வெளிக்காட்டப்பட்டவாறான நிறக்குறியீடு ;

(ஈ) குறிப்பிட்ட சீனி மட்டம் தொடர்பான நிறத்தைக் குறித்துரைக்கின்றதும் அட்டவணை III இன் கீழ் காட்டப்பட்டதுமான அடையாளக்குறியிலுள்ள உள்வட்டத்தின் விட்டம், 1 சென்றி மீற்றருக்குக் குறைவாகவிருத்தலாகாது ;

(உ) அட்டவணை III இலுள்ள விவரணம், 1.5 மில்லி மீற்றரென்ற ஆகக்குறைந்த உயரத்துடனான எழுத்தளவைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், தெளிவாக வாசிக்கக்கூடியதாக இருத்தலும் வேண்டும்.

4. சீனி மட்டத்தின் விவரணம், மூன்று மொழிகளிலும், விடயத்துக்கேற்ப, உயர்நிலைச் சீனி, நடுநிலைச் சீனி அல்லது குறைந்த நிலைச் சீனி என்பனவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :-

"சீனி" என்பது, உணவிலுள்ள எல்லா ஒற்றைச் சீனிகளும் மற்றும் இருகூற்றுச் சீனிகளும் என்று பொருளாகும் ;

"கார்பனூட்டப்பட்ட குடிபானங்கள்" என்பது, கரைக்கப்பட்ட காபனீரொட்சைட்டையும் சீனியையும் வேறு அனுமதிக்கப்பட்ட சேர்மானப்பொருட்களையும் கொண்டுள்ள மதுபானம்சாரா நீரை அடிப்படையாக கொண்ட குடிபானம் என்று பொருளாகும் ;

"பரிமாறுவதற்குத் தயாராகவுள்ள குடிபானங்கள்" என்பது, செறிவு குறைக்கப்படாமல் உட்கொள்ளப்படுவதற்கு உட்கருதப்பட்டதும், ஏதேனும் கூழுடனோ அல்லது அதுவல்லாமலோ நொதியாத ஆனால் நொதித்தற்தகு பழச்சாறு அல்லது பாணி அல்லது செறிவூட்டலிலிருந்து தயாரிக்கப்பட்டதும், ஏதேனும் கரைகிற இனிப்பூட்டியையும் குடிக்கத்தக்க நீரையும் கொண்டுள்ளதுமான ஒரு பழப்பானம் என்று பொருளாகும் ;

"பழத்தேன்" என்பது, பழச்சாறுக்குச் சீனிகள், தேன், பாகு அத்துடன்/அல்லது பாகுநீர் அத்துடன்/அல்லது இனிப்பூட்டிகள் மற்றும் வேறு அனுமதிக்கப்பட்ட சேர்மானப்பொருட்களைச் சேர்த்தோ அல்லது சேர்க்காமலோ நீரைச் சேர்ப்பதன் மூலம் பெறப்பட்ட நொதியாத ஆனால் நொதித்தற்தகு தயாரிப்பு என்று பொருளாகும் ;

"பழச்சாறுகள்" என்பது, பொருத்தமான வழிவகைகள் மூலம் நன்னிலையில் பேணப்பட்ட தோதான முறையில் முதிர்ந்த மற்றும் புதிய பழத்தின் உண்ணத்தக்க பாகத்திலிருந்து பெறப்பட்ட நொதியாத ஆனால் நொதித்தற்தகு திரவம் என்று பொருளாகும்.

(ஒழுங்குவிதி 2)

## *அட்டவணை I*

கார்பனூட்டப்பட்ட குடிபானங்கள்

பாலை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகள் தவிர்ந்த, பரிமாறுவதற்குத் தயாராகவுள்ள குடிபானங்கள்

பழத் தேன்
பழச் சாறுகள்

(ஒழுங்குவிதி 3)

## *அட்டவணை II*

நிறக் குறியீட்டுக்கான சீனி உள்ளீடு

| *நிரல் I*<br>*சீனி உள்ளீடு*<br>*(பானத்தின் ஒவ்வொரு 100 மில்லி லீற்றருக்கும்)* | *நிரல் II*<br>*ஒப்புநோக்கிய சீனி மட்டம்* | *நிரல் III*<br>*நிறக் குறியீடு* |
|---|---|---|
| *11 கிராமுக்கு அதிகமாக* | *உயர்நிலைச் சீனி,* | *சிவப்பு* |
| *2 கிராம் முதல் 11 கிராம் வரை* | *நடுநிலைச் சீனி* | *பழுப்பு* |
| *2 கிராமுக்குக் குறைவாக* | *குறைந்த நிலைச் சீனி* | *பச்சை* |

(ஒழுங்குவிதி 3 மற்றும் 4)

*அட்டவணை III*

*அடையாளக் குறி*




5- 505

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.